**03.03.2025**

**அ.வ.எண். 38/2021**

**<u>வா.சா.4 மனோகரன் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்துகளில் 'எ' அட்டவணையாகவும் 'பி' அட்டவணையாகவும் வாதி காண்பித்துள்ளார் என்றால் சரிதான். தாவா எ அட்டவணை சொத்தின் ஜக்குபந்தி கிழக்கு பக்கம் சாலை, மேற்கு பக்கம் ராஜன் என்பவரின் நிலம், வடக்கு பக்கம் புறம்போக்கு நிலம், தெற்கு பக்கம் ராஜன் ஐயர் என்பவரின் நிலம். ராஜன் ஐயர் என்பவர் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். தாவா எ அட்டவணை சொத்து புறம்போக்கு நிலம். தாவா 'பி' அட்டவணை சொத்தின் ஜக்குபந்தி எனக்கு தெரியாது. மேற்படி புறம்போக்கு நிலத்தின் விஸ்தீரணம் சுமார் 20 செண்ட். மேற்படி 20 செண்ட் என்பது மொத்த விஸ்தீரணத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான். மேற்படி 20 செண்டில் மண் சாலை உள்ளதா தார் சாலை உள்ளதா என்றால் தார் சாலை உள்ளது.

2. மேற்படி 20 செண்ட் போக மீதம் உள்ள நிலத்திற்கும் வாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் அவரது நிலத்திற்கு வழி விடுவதில் பிரச்சனை. வாதி கிரையம் பெற்ற சொத்துக்கு மேற்படி 20 செண்ட் புறம்போக்கு நிலம் வழியாக செல்லலாம் என்றால் சரிதான். மேற்படி 20 செண்ட் புறம்போக்கு நிலத்தில் ஒரு இரும்பு கேட் உள்ளது என்றால் சரிதான். அந்த கேட் வழியாகதான் வாதி

சாலையிலிருந்து அவரது சொத்துக்கு சென்று வருகிறார் என்றால் சரிதான். இந்த இரும்பு கேட்டை போட்டது 2ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. வாதிதான் கேட் போட்டார்.

3. வழக்கின் விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் தாவா சொத்துகள் புலத்தில் எவ்வாறு உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.